PRESS NOTE

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி தாலுகா, களக்காடு, கோவில்பத்து, பிள்ளைமார் புதுத்தெருவில் வசிக்கும் திரு.முத்துராஜ் மகன் திரு.டேவிட் என்பவரது தொலைந்து போன ஓட்டுநர் உரிமத்தை கண்டுபிடித்து தர வேண்டி, களக்காடு காவல் நிலையத்தில் 02.08.2014-ம் தேதி கொடுத்த புகார் மனு மீது, மனு ரசீது (Community Service Register) வழங்கி தொலைந்து போன ஓட்டுநர் உரிமம் தொடர்பான சான்று (Not Traceable Certificate) வழங்குவதற்கு அங்கு பணியில் இருந்த சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் திரு.வெள்ளதுரை என்பவர் ரூ.3,000/-ம் லஞ்சமாக கேட்டுள்ளார். அதன் பேரில் 05.08.2014-ம் தேதி திரு.டேவிட் என்பவர் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் வந்து கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.08/2014-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, மேற்படி லஞ்சப்பணத்தை, 08.08.2014-ம் தேதி மேற்படி திரு.வெள்ளதுரை கேட்டு வாங்கிய போது கையும் களவுமாக பிடித்த வழக்காகும். இந்த வழக்கானது ஊழல் வழக்குகளை விசாரணை செய்யும் சிறப்பு நீதிமன்றம், திருநெல்வேலி நீதிமன்றத்தால் Spl.C.C No.06/2015-ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வந்த நிலையில், மேற்படி சிறப்பு நீதிமன்றத்தில் விசாரணை முடிந்து இன்று (19.12.2025) வழங்கப்பட்ட தீர்ப்பில் எதிரி திரு.வெள்ளதுரை

குற்றவாளி என்று தீர்ப்பளிக்கப்பட்டது. மேற்படி எதிரி திரு.வெள்ளதுரை என்பவருக்கு ஊழல் தடுப்பு சட்டம் 1988, பிரிவுகள் 7 மற்றும் 13 (2) r/w 13 (1) (d)-ன் படி தலா மூன்று ஆண்டுகள் சிறை தண்டனையும், மேற்படி தண்டனையை ஏக காலத்தில் அனுபவிக்கவும் உத்தரவிடப்பட்டு ரூ.10,000/- அபராதமும் விதித்து மாண்புமிகு நீதிபதி திரு.R.சுப்பையா அவர்கள் தீர்ப்பு வழங்கினார்கள். எதிரி திரு.வெள்ளதுரை அபராத தொகையை உடன் செலுத்திவிட்டார். இந்த வழக்கில் அரசு தரப்பில் அரசு வழக்கறிஞராக திரு.சொக்கலிங்கம் என்பவர் ஆஜரானார். மேற்படி வழக்கின் சாட்சிகளை தற்போதைய காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங் என்பவர் நீதிமன்றத்திற்கு முறையாக ஆஜர் செய்தார்.

19/12/25

Addl. Supdt. of Police
Vigilance and Anti-Corruption
16/53A/1, Masilamani Nagar,
Tirunelveli - 627 005.